## இருநாட்டு மீனவர்கள் சந்திக்கும் ஆலோசனைக் கூட்டம்!

# ஒன்றிய அரசு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 4-

இந்தியா, இலங்கை இரு நாட்டு மீனவர்கள் சந்திக்கும் ஆலோசனைக் கூட்டத்தை கூட்ட ஒன்றிய அரசு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று ‘தினகரன்’ நாளேடு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து 2.11.2024 தேதிய ‘தினகரன்’ தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு, இலங்கை மீனவர்கள் பிரச்சினை என்பது ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இலங்கைக் கடற்படையினர் தாக்குதலால் நூற்றுக்கணக்கான தமிழ்நாட்டு மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மீனவர்கள் உடல் ஊனப்படுத்தப்பட்டும், பலர் படகுகளை இழந்து தங்களது வாழ்வாதாரத்தை பறிகொடுத்தும் உள்ளனர். மன்னார் வளைகுடா, பாக் ஜலசந்தி பகுதிகளில் தொன்றுதொட்டு இருநாட்டு மீனவர்களும் மீன் பிடித்து வந்த நிலையில் சமீபகாலமாக இந்த பகுதிதான் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது தாக்குதல் நடக்கும் பகுதியாக மாறி உள்ளது.

கைது செய்யப்படும் தமிழ்நாடு மீனவர்களின் படகுகளை நாட்டுடமையாக்குதல், மீனவர்களுக்கு லட்சக்கணக்கில் அபராதம் விதித்தல், அபராதத்தை கட்டத் தவறினால் சிறை தண்டனை விதிப்பது அல்லது அபராதத்தையும், சிறை தண்டனையும் ஒரு சேர விதிப்பது என இலங்கை அரசு வெளிநாட்டு மீன்பிடி தடைச் சட்டங்களை கடுமையாக அமல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது, சிறைபிடிப்பது, படகுகளை கைப்பற்றுவது, வலைகளை அறுப்பது போன்ற அத்துமீறல்களில் இலங்கைக் கடற்படை தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

எனவே வெளிநாட்டு மீன்பிடி சட்டத்தை திரும்ப பெறக் கோரியும், மீனவர்களுக்கு அபராதம், சிறை தண்டனை வழங்குவதை கண்டித்தும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகள்,


தினகரன்
நவம்பர் 2, 2024 சனிக்கிழமை
மவுனம் கலையுமா?
தமிழ்நாடு, இலங்கை மீனவர்கள் பிரச்சினை என்பது ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இலங்கை கடற்படையினர் தாக்குதலால் நூற்றுக்கணக்கான தமிழ்நாட்டு மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மீனவர்கள் உடல் ஊனப்படுத்தப்பட்டும், பலர் படகுகளை இழந்து தங்களது வாழ்வாதாரத்தை பறிகொடுத்தும் உள்ளனர். மன்னார் வளைகுடா, பாக் ஜலசந்தி பகுதிகளில் தொன்றுதொட்டு இரு நாட்டு மீனவர்களும் மீன் பிடித்து வந்த நிலையில் சமீபகாலமாக இந்த பகுதிதான் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது தாக்குதல் நடக்கும் பகுதியாக மாறி உள்ளது.
கைது செய்யப்படும் தமிழ்நாடு மீனவர்களின் படகுகளை நாட்டுடமையாக்குதல், மீனவர்களுக்கு லட்சக்கணக்கில் அபராதம் விதித்தல், அபராதத்தை கட்டத் தவறினால் சிறை தண்டனை விதிப்பது அல்லது அபராதத்தையும், சிறை தண்டனையும் ஒரு சேர விதிப்பது என இலங்கை அரசு வெளிநாட்டு மீன்பிடி தடைச் சட்டங்களை கடுமையாக அமல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு

மீனவர்களை உடனடியாக விடுவிக்கக் கோரியும் ஒன்றிய அரசை வலியுறுத்தி வரும் தமிழ்நாடு மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரை கண்டித்து போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர். இந்த ஆண்டில் மட்டும் ஜனவரி மாதம் முதல் அக்டோபர் வரை 10 மாதங்களில் இலங்கைக் கடற்படையினர் 62 தமிழ்நாட்டு மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்து, 462 மீனவர்களை கைது செய்துள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்க ஒன்றிய அரசானது ஆக்கபூர்வமான திட்டங்கள் எதையும் முன்னெடுக்கவில்லை என்பதே தமிழ்நாடு மீனவர்களின் குற்றச்சாட்டாக உள்ளது. தமிழ்நாடு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது தொடர்பாகவும், இதை தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கை எடுக்கக்கோரியும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய அரசுக்கு பலமுறை கடிதம் எழுதியுள்ளார். ஒவ்வொரு முறையும் பிரதமரை சந்திக்கும் போதும், தமிழ்நாடு மீனவர்கள் பிரச்சினை குறித்து வலியுறுத்த முதல்வர் தவறியதில்லை.

ஆனாலும் தமிழ்நாடு மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணாமலும், உறுதியான நடவடிக்கை எடுக்காமலும் ஒன்றிய அரசு மவுனம் காத்து வருவது மீனவர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இந்த சூழலில்தான் இருநாட்டு மீனவர்கள் கூட்டத்தை நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காணுவது தொடர்பாக சமீபத்தில் இலங்கை அதிபர் ஆலோசனை நடத்தி உள்ளார். இந்த கூட்டத்தில் இந்தியா, இலங்கை இரு நாட்டு மீனவர்களின் நீண்ட கால பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்தும் விரிவாக பேசப்பட்டுள்ளது.

இருநாட்டு மீனவர் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து பேசினால் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு எட்டப்பட வாய்ப்பு உள்ளதாக தமிழ்நாடு மீனவர்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். எனவே இருநாட்டு மீனவர்கள் சந்திக்கும் ஆலோசனைக் கூட்டத்தை துரிதப்படுத்தவும், கூட்டத்தை நடத்த தேவையான ஏற்பாடுகளையும் ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் என்பது தமிழ்நாட்டு மீனவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. வழக்கம்போல ஒன்றிய அரசு மவுனம் காக்குமா? அல்லது தீர்வை நோக்கி அடியெடுத்து வைக்குமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் காங்கிரஸின் உண்மை முகம், மக்கள்முன் மிக மோசமாக அம்பலமாகி உள்ளது - என்று பிரதமர் சாடியுள்ளாரே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; நமது பிரதமர், தம்மீது சார்ந்துள்ள குறைகளை, எதிர்க்கட்சிகளின் மீது இட்டுக்கட்டிச் சுமத்துவதை வழக்கமாகக் கொண்டவர். ஒவ்வோராண்டும் 2 கோடிப் பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன்; நாட்டில் உள்ள ஒவ்வொருவருடைய வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் வரவு வைப்பேன்; விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பு ஆக்குவேன்; - என்பன போன்ற இவர் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் மக்கள் மனதில் இன்றும் இருக்கின்றன; ஆனால் பிரதமர் மட்டும் என்றோ மறந்து விட்டாரே !**

**“கொடுத்தவனே பறித்துக் கொண்டானே” என்று வரும் திரைப்படப் பாடல் நினைவிருக்கிறதா ?**

# அரியலூர் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கை!



அரியலூர், நவ. 4-

அரியலூர் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சா.சி.சிவசங்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அரியலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் 06.11.2024 புதன்கிழமை காலை 10.30 மணியளவில் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள ரிதன்யா மஹாலில் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் முனைவர் சபாபதி மோகன், திருமதி கலா சுந்தரமூர்த்தி, ஏ.கே.அருண் கலந்துகொள்கிறார்கள்

அதுசமயம் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணி நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. கழகத் தலைவர் அவர்கள் வருகை.

2.தொகுதி பொறுப்பாளர்கள் அறிமுகம்.

3. வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்.

4. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி புதுக்கோட்டையில் இருந்து திருச்சி வரை செல்லும் புதிய பேருந்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை. முத்துராஜா, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் மு.லியாகத் அலி ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். நிகழ்வில் புதுக்கோட்டை போக்குவரத்து துறை வணிக மேலாளர் சுரேஷ் பார்த்திபன், மாமன்ற உறுப்பினர் பால்ராஜ், கழக நிர்வாகிகள் அ.ரெத்தினம், ஜி.ஞானசேகரன், பி.கே.வெங்கடேஷ், ஆர்.எம்.சத்யா, ரமேஷ்குமார், மாலையீடு பிரபு, கார்த்திக், தனபால், ஞானவேல், இதயம் அப்துல்லா, அஞ்சான் சரத் மற்றும் போக்குவரத்து பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### நாகை மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!



நாகை. நவ.4-

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. நாகை மாவட்டத்தில் உள்ள நாகை, கீழ்வேளூர், வேதாரண்யம் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சாரி பார்ப்பு மற்றும் வாக்காளர் சேர்தல் முகாம் நடைபெறுகிறது.

இதில் 1.1. 2025 ல் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களை (31.12.2006க்கு முன் பிறந்தவர்கள்) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படலாம். இந்த வாக்காளர் சேர்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் சிறப்பு முகாம் 16.11.2024 சனி, 17.11.2024 ஞாயிறு மற்றும் 23.12.2024 சனி, 24.12.2024 ஞாயிறு ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இந்த சிறப்பு முகாமில் புதிதாக பெயர் சேர்ப்பதற்கு படிவம் 6, ஆதார் விபரம் சேர்க்க படிவம் 6 பி., பெயர் நீக்கம் செய்ய படிவம் 7, எழுத்துபிழைகள் , முகவரி மாற்றம் செய்ய படிவம் 8 ஆகியவற்றை பயன் படுத்தி வழங்கலாம். மேலும் இந்த படிவங்களை 29.10.2024 முதல் 28.11.2024 வரை வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வழங்கலாம். மேலும் இந்த பணியில் புதிதாக தேர்ந்தேடுக்கப்பட்ட வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதகள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றும், வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் குறித்து ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் கழகத்தினர் மற்றும் வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2) தெரிவித்து பணியினை செம்மையாக செய்திட வேண்டும் என்றும், பெயர் சேர்த்தல், நீக்கல் விவரங்களின் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்திட ஏதுவாக மாவட்டக் கழகத்திடம் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் ஒப்படைத்திட வேண்டும் என்று இவ்வாறு தனது அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஈரோடு தெற்கு மாவட்டக் கழக - முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் முல்லை க.முத்து மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, நவ. 4–**

**ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் முல்லை க.முத்து அவர்கள், 1.11.2024 அன்று வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார். அவருக்கு வயது 78,**

**கொண்ட கொள்கையில் இருந்து கிஞ்சிற்றும் வழுவிடாது இறுதி வரை கழகப் பணியாற்றி வந்த கழக முன்னோடி முல்லை க.முத்து அவர்களின் மறைவுச் செய்தியறிந்து வருந்திய கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துள்ளார்.**



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் கிராமத்தில் கலியமூர்த்தி என்பவரின் வீடு மின் கசிவினால் தீ பிடித்து எரிந்து முற்றிலும் சேதம் அடைந்தது, இதில் சுமார் ரூ.5 லட்சம் மதிப்பிலான நகை,பணம் மற்றும் பொருட்கள் எரிந்து தீயில் கருகியது,தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக ஆட்சி மன்ற உறுப்பினர்,வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ நேரில் சென்று ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கினார், அப்போது ஊராட்சி மன்ற தலைவர் வாசுகி ராஜாசுரேஷ், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் பத்மநாபன் மற்றும் கிளை கழக செயலாளர்,கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# பெண்களுக்கு ரூ.1000 வழங்கும் திட்டத்தால் விற்பனை அதிகரிப்பு!

சென்னை, நவ.4–

இந்த தீபாவளிக்கு ஜவுளி அதிகமாக விற்பனை செய்ததற்கு தமிழக அரசு பெண்களுக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கி வருவதும் ஒரு காரணமாக கூறப்படுகிறது.

இந்த பணத்தை சேமித்து வைத்து, பெண்கள் அதிகமாக கடைகளுக்குச் சென்று ஜவுளி, பட்டாசு, இனிப்புகள் என்று தீபாவளிக்கு அதிக அளவில் பொருட்களை வாங்கிச் சென்றனர்.

ஆண்களை எதிர்பார்க்காமல் தங்களுடைய கையில் பணம் இருந்ததால், தீபாவளியை அவர்கள் சிறப்பாக கொண்டாடியுள்ளனர். மக்களிடம் அதிக அளவில் பணம் புழங்கியதால் விற்பனை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்

# பாகமுகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!

**விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய வாரியாக (BLA-2) கூட்டம் 04.11.2024**

| நேரம் | ஒன்றியம் | இடம் |
|---|---|---|
| காலை 9 மணி | விராலிமலைகிழக்குஒன்றியம் | அழகுநாச்சியம்மன் மஹால் களமாவூர் |
| காலை 10 மணி | அன்னவாசல் தெற்கு & அன்னவாசல் பேரூர் | அண்ணா மண்டபம் அன்னவாசல் |
| காலை 11 மணி | அன்னவாசல் வடக்கு & இலுப்பூர் பேரூர் | சமுதாய கூடம் இலுப்பூர் |
| மதியம் 12 மணி | விராலிமலை மத்திய ஒன்றியம் | மாலாமங்கள மஹால் விராலிமலை |
| மதியம் 1245 | விராலிமலை மேற்கு ஒன்றியம் | ஒன்றிய அலுவலகம், விராலிமலை |

**கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய வாரியாக (BLA-2) கூட்டம் 05.11.2024**

| நேரம் | ஒன்றியம் | இடம் |
|---|---|---|
| காலை 10 மணி | குன்றாண்டார் கோவில் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றியங்கள் கீரனூர் & பேரூர் கழகம், அன்னவாசல் வடக்கு ஒன்றியம் | OSP திருமணமஹால் கீரனூர் |
| காலை 11மணி | கந்தர்வகோட்டை வடக்கு & கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றியம் | AIT -திருமண மண்டபம் |
| மதியம் 12 மணி | கறம்பக்குடி வடக்கு ஒன்றியம் & கறம்பக்குடி பேரூர் | ராஜ சங்கீத மஹால் கறம்பகுடி |

**புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய வாரியாக (BLA-2) கூட்டம் 10.11.2024**

| நேரம் | ஒன்றியம் | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம் | வீரடி விநாயகர் மஹால் ஆதனக் கோட்டை |
| காலை 10.30மணி | கறம்பக்குடி தெற்கு ஒன்றியம் | வெட்டன் விடுதி |
| காலை 11.30மணி | புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம் | மாவட்ட கழக அலுவலகம், புதுக்கோட்டை |
| மதியம் 12.30 மணி | புதுக்கோட்டை மாநகரம் | மாவட்டகழக அலுவலகம், புதுக்கோட்டை |

**கே.கே.செல்லபாண்டியன்**
செயலாளர்
புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.